**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.480/2014**

**தேதி : 11.06.2026**

**(வா.சா.2 ) – திரு. செல்வராஜ்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :- (3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. வா.சா.ஆ.10 ஆவணம் வீரவேணிக்கும், சக்திவேலுக்கும் இடையில் எழுதப்பட்டதாக உள்ளது. செல் ரசீதில் நான் தரப்பினர் அல்ல. அந்த செல் ரசீதில் நான் கையெழுத்து செய்துள்ளேன். சாட்சியாக கையெழுத்து போடவில்லை. செல் ரசீது யாரால், யாருக்கு வழங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.10 ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் அது எனக்குத் தெரியவில்லை. செல் ரசீதில் நான் கிரைய ஒப்பந்தம் எழுதியதாகவும், அதை ரத்து செய்வதாகவும்தான் உள்ளது. கிரைய ஒப்பந்தப்பத்திரமும், ரத்துப் பத்திரமும் என்னிடம் இல்லை.

2. நான் ரூ.1,00,000/- சக்திவேலிடமிருந்து வாங்கினேன். அந்த விபரத்தைத்தான் நான் சாட்சியாக கூறுகிறேன். செல் ரசீதில் சக்திவேல் எதற்காக கையொப்பம் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செல் ரசீதில் சக்திவேல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. வீரவேணி எங்கு இருக்கிறார், என்ன தொழில் செய்கிறார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. வீரவேணியை எனக்குத் தெரியாது, சக்திவேலுக்குத் தெரியும். செல் ரசீதில் வீரவேணி எத்தனை கையொப்பங்கள் செய்துள்ளார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. செல் ரசீது எழுதப்படும்போது, அன்றைய தேதியில் வீரவேணி மைசூரில் இன்போசிஸ் நிறுவனத்தில் வேலை செய்து பார்த்து வந்தார் என்றால் எனக்குத் தெரியாது.

3. சக்திவேல் என்னுடைய நெருங்கிய நண்பர் என்பதால் வீரவேணி பேரில் மோசடியாக செல் ரசீதை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும், சக்திவேலும் ஒரே கட்சிக்காரர்கள். நான் சக்திவேலுடன் கிரைய ஒப்பந்தம் போடவில்லை என்றும், அதை ரத்து செய்யவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்காக வீரவேணி ரூ.15,00,000/- பெற்றுக்கொண்டதாக பொய்

**சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வீரவேணி ரூ.15,00,000/- வாங்கவும் இல்லை என்றும், செல் ரசீது எதுவும் எழுதிக்கொடுக்கவுமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை :- இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.06.11 16:36:38 +0530

Additional Sub Judge,
Palani.